**CCE PR**
**REVISED & UN-REVISED**

**D**

ಕರ್ನಾಟಕ ಪ್ರೌಢ ಶಿಕ್ಷಣ ಪರೀಕ್ಷಾ ಮಂಡಳಿ, ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003

**KARNATAKA SECONDARY EDUCATION EXAMINATION BOARD, MALLESWARAM, BANGALORE – 560 003**

ಎಸ್.ಎಸ್.ಎಲ್.ಸಿ. ಪರೀಕ್ಷೆ, ಜೂನ್ — 2018

**S. S. L. C. EXAMINATION, JUNE - 2018**

ಮಾದರಿ ಉತ್ತರಗಳು

# MODEL ANSWERS

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T**

CODE NO. : **10-T**

## ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು
## Subject : First Language — TAMIL

**( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )**

**( ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / Private Repeater )**

ದಿನಾಂಕ : 22. 06. 2018 ] [ ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : **125**

Date : 22. 06. 2018 ] **[ Max. Marks : 125**

**பகுதி அ**

**I. ஒரு தொடரில் விடை தருக :** **16 × 1 = 16**

1. பிரம்பால் அடி கொடுத்தவர் யார் ?

*Ans.* :

பிரம்பால் அடிகொடுத்தவர் பாண்டியன்.

2. நெல் முதிர்ந்தால் யார் கைக்குப் போய்ச் சேரும் ?

*Ans.* :

நெல் முதிர்ந்தால் முதலாளிகளின் கைக்குப் போய்ச் சேரும்.

3. தலைவி என்ன சமைத்தாள் ?

*Ans.* :

தலைவி புளிக்குழம்பு சமைத்தாள்.

4. C.F.C. என்றால் என்ன ?

*Ans.* :

C.F.C. என்பது குளோரோ ஃப்ளோரோ கார்பன். இதன் ஒரு மா க்யூல் ஒரு லட்சம் ஓசோன் மா க்யூலை அழிக்கக் கூடியதாம்.

5. இலட்சியம் இல்லாத வாழ்க்கை எதைப் போன்றது ?

*Ans.* :

இலட்சியம் இல்லாத வாழ்க்கை ஆணியில் தொங்குகிற சட்டை மாதிரி. உள்ளீடற்றுத் தள்ளாடுகிறது.

6. மாணிக்கவாசகர் சிவனை எவ்வுருவில் தோன்றுவதாய்க் கூறுகிறார் ?

*Ans.* :

ஒளி விளக்காக திருமேனி உருவில் தோன்றுவதாய் கூறுகிறார்.

7. சீதை அனுமானிடம் கொடுத்தனுப்பிய அணிகலன் யாது ?

*Ans.* :

அனுமனிடம் கொடுத்தனுப்பியது சூளாமணி.

8. திருமகள் எங்கு குடிபுகுந்து மகிழ்ந்திருக்கிறாள் ?

*Ans.* :

திருமகள் தாமரையில் குடிபுகுந்து மகிழ்ந்திருந்தாள்.

9. காளைகளுக்குச் சொல்வது போல் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் உரைப்பது யாது ?

*Ans.* :

பழைய போக்கில் பயன் இல்லை. நல்ல விஷயம் இருக்கணும் மூளையிலே! என்று காளைகளுக்குச் சொல்வது போல கூறுகிறார்.

10. வள்ளுவர் கூறும் புலவர் இயல்பு யாது ?

*Ans.* :

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்

அனைத்தே புலவர் தொழில்.

11. யந்திரங்களாக மாறுகிறவர்கள் எதை நோக்கமாகக் கொண்டு வாழ்கிறார்கள் ?

*Ans.* :

அறிவை நோக்கமாகக் கொண்டு வாழ்கின்றவர் நல்ல யந்திரங்களாக மாறுகிறவர்கள்.

12. இளம்பெருவழுதி பாகுபாடு செய்த மனிதர்களின் இருவகையினர் யாவர் ?

*Ans.* :

தனக்கென வாழ்வோர்

பிறர்க்கென வாழ்வோர்.

13. இலங்காவித் தீவுகள் எந்த நாட்டின் பகுதி ?

*Ans.* :

இலங்காவித் தீவுகள் மலேசிய நாட்டின் ஒரு பகுதி.

14. ஆதி புராணத்தின் மூலநூல் யாது ?

*Ans.* :

ஆதி புராணத்தின் மூல நூல் பூர்வ புராணம்.

15. தமிழர்களைப் பழித்த வடவரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

*Ans.* :

வடவரசர்கள் பெயர் : கனகன், விசயன்.

16. இன்றைய இளைஞன் எவற்றை இடறிவிட வேண்டும் ?

*Ans.* :

தன்னம்பிக்கையைச் சுட்டெரிக்கும் இலக்கியங்களையும் ஏற்பாடுகளையும்.

**II. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 16 × 2 = 32**

17. தாய், தந்தை, கொல்லன் செய்ய வேண்டிய கடமைகளாக பொன்முடியார் கூறியவற்றை விளக்குக.

*Ans.* :

பெற்று வளர்த்தல் தாயின் கடமை. நற்பண்புகள் நிறைந்தவனாக்குதல் தந்தையின் கடமை. வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லனின் கடமை.

18. பெண்கள் எதை வெட்டி விட்டோம் என்று கும்மியடித்தனர் ?

*Ans.* :

மாடு போன்று அடக்கிக் காட்ட வந்தவரை தொழுவில் மாட்டும் வழக்கத்தைக் கொண்டவரை வெட்டி விட்டோம் என்று கும்மியடித்தனர்.

19. நிலக்கரி தரும் நன்மைகள் யாவை ?

*Ans.* :

ஆலைகளை இயக்கும், அனல்மின் தோற்றும், சாலை அமைக்கப் பயன்படும் எண்ணற்ற தொழிற்கூடங்கள் அமைக்கப் பயன்படும்.

20. இறந்த காலம் பற்றி வைரமுத்து கூறுவது யாது ?

*Ans.* :

இறந்த காலத்தில் கட்டப்பட்டதுதான் தாஜ்மஹால். ஆனால் அந்த இறந்த காலம் தாஜ்மஹா ன் மேல் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

திருவள்ளுவன் இறந்த காலத்தில் இருந்தவன் ஆனால் இன்னும் இறக்கவில்லை.

21. சைகாஸ் என்னும் தாவரங்களின் சிறப்பினை எழுதுக.

*Ans.* :

பல நூற்றாண்டுகள் வாழும் சிறப்புமிக்கன. இவை அந்தப் பாறைகளில் வளைந்து ஊஞ்சல் போல் தொங்கும் காட்சி அருமையானது. தொண்ணூற்றைந்து வகைகள் உண்டு.

22. பம்பன் இயற்றிய நூல்கள் யாவை ?

*Ans.* :

பம்பன் இயற்றிய நூல்கள் :

(i) ஆதி புராணம், (ii) பம்ப பாரதம் (அல்லது) விக்கிரமார்ச்சுன விஜயம்.

23. அடுக்குத் தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாட்டை எழுதுக.

*Ans.* :

அடுக்குத் தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாடுகள்

| | **அடுக்குத் தொடர்** | **இரட்டைக் கிளவி** |
|---|---|---|
| 1. | சொற்கள் பல அடுக்கி வரும் | இரண்டு முறை மட்டுமே வரும் |
| 2. | பிரிக்க முடியும்; பிரித்தால் பொருள் தரும். | பிரிக்க முடியாது. பிரித்தால் பொருள் தராது. |
| 3. | விரைவு, அச்சம், விலை பகரல் பொருளில் வரும்<br>(எ.கா.) பாம்பு, பாம்பு | ஒ க்குறிப்பு தோன்ற வரும்<br>(எ.கா) சலசல |

24. மகன் தந்தைக்குச் செய்யும் உதவி யாது ?

*Ans.* :

மகன் தந்தைக்கு செய்யும் உதவி

- இவன் தந்தை இவனைப் பெற்றெடுக்க என்ன தவம் செய்தானோ என்று பிறர் பேசும்படி செய்வதாம்.

25. மாதங்கம், பகடு, கம்பமா என்ற பாணனின் சொற்களுக்கு பாடினி உணர்ந்து கொண்ட பொருள்கள் முறையே யாவை ?

*Ans.* :

| பாணன் கொண்டுவந்த பொருள் | | பாடினி உணர்ந்து கொண்ட பொருள் |
|---|---|---|
| மாதங்கம் | - | பெரிய தங்கம் |
| பகடு | - | எருது |
| கம்பமா | - | நல்ல களி. |

26. தலைவி தயிரைப் பிசைந்து சமைக்க மேற்கொண்ட செயல்பாட்டினை எழுதுக.

*Ans.* :

முற்றிய கட்டித் தயிரைக் காந்தள் விரலால் துழாவுதல். கழுவாத கையால் நழுவும் ஆடையை சரி செய்தாள். குவளை மலரைப் போன்ற மையுண்ட கண்களில், தாளிப்பினது புகை மணப்ப புளிக் குழம்பு சமைத்தல்.

27. பேராசிரியர் சேதுபிள்ளையின் உரையாடல் எத்தகையது ?

*Ans.* :

பேராசிரியர் உரையாடல்

தேனுண்ட வண்டு என மதிமயங்கி இடம்பெயர மனமில்லாது இருப்பர்

ஐந்து நிமிடம் பேசினால் ஐந்து நாட்கள் சிந்திக்கலாம்.

28. நீதிசாரம் என்ற நூல் பற்றி எழுதுக.

*Ans.* :

கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. தர்மபுரி மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்டது.

மரம் வளர்த்தால் நரகம் இல்லை.

29. கிராமத்தின் பரம்பரைத் தொழிலாளர்கள் ஏன் கிராமத்தைக் கைவிட்டனர் ?

*Ans.* :

நகரத்தில் கிடைக்கும் கூ த்தொகை கிராமத்தில் கிடைக்காது.

கொடுக்கவும் கட்டாது.

30. சிந்தனைக்கு விருந்தாகும் விடுகதை ஒன்றினைக் குறிப்பிடுக.

*Ans.* :

கால் இல்லாத கள்வன் - கால் உள்ளவனைப் பிடித்தான்.

தலை இல்லாதவன் அதைப் பார்த்து கலகலவென்று சிரித்தான்.

- பாம்பு, தவளை, நண்டு.

31. மோனை என்றால் என்ன ?

*Ans.* :

செய்யுளில் அடிதோறும் முதல் எழுத்துகள் ஒன்றிவரத் தொடுப்பது.

32. இரட்டுறமொழிதல் என்றால் என்ன ?

*Ans.* :

செய்யுளில் சொல்லோ, தொடரோ இரு பொருள்பட பாடுவது, பேசுவது.

**III. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : 11 × 3 = 33**

33. அசோகவனத்தில் சீதை இருந்த நிலையை அனுமான் எவ்வாறு விளக்கினான் ?

*Ans.* :

அசோக வனத்தில் பொன்மயமான சோலையில் இலக்குவன் அமைத்த புல்லால் வேய்ந்த பர்ணசாலையில் வீற்றிருந்தாள். அரக்கர் காவல் காத்தனர். இராவணன் சீதையைத் தீண்டவில்லை.

34. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாய் திரும்பிவர நேரும் ? அதன் விளைவு எது ?

*Ans.* :

இருபத்தி நான்கு வயதிற்குள் உன் திசையை உறுதி செய். இல்லையேல் பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வர நேரும். அப்போது படும் அடியினால் முப்பது வயதிலேயே முதுமை வந்துவிடும்.

35. 'பலா'வை விட 'களா' சிறந்தது என்று ஈரோடு தமிழன்பன் எவ்வாறு விளக்குகிறார் ?

*Ans.* :

'களா' சிறந்தது என்றால் அதுதான் இறுதி வரையில்.

'பலா' கனவுதான். முயற்சி செய். 'பலா' உண்பது என்று விரதம் கொள்.

சந்திப்பது சாவுதான் என்றாலும் 'களா'வை விட இனிது. பலாவை அடைய முயற்சி செய்.

36. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

அல்லது

வேற்றுமை அணியை விளக்குக.

*Ans.* :

இயல்பாக நடக்கும் ஒன்றின் மீது ஆசிரியர் தன் குறிப்பை ஏற்றிச் சொல்வது.

(எ.கா) கோயில் மணி ஆம், ஆம் என்று ஒ த்தது.

( அல்லது )

இரு பொருள்களை ஒப்பிட வந்த ஆசிரியர் ஏதேனும் ஒரு காரணத்தால் இரண்டையும் வேறுபடுத்துவது.

(எ.கா.) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

37. "ஞாயிற்றைக் கைம் மறைப்பார் இல்" என்ற பழமொழியை விளக்குக.

*Ans.* :

ஞாயிற்றைக் கையால் மறைக்க இயலாது

அறிவிற் சிறந்த சான்றோன் புகழை பழிச் சொற்களால் மறைக்க முடியாது.

38. யந்திர மனிதர்களால் உண்டாகும் தீமைகள் யாவை ?

*Ans.* :

மனித இயந்திரங்கள் மூளையால் ஆனவை.

பரிட்சைகள் பெருகும், தந்திரங்கள் வளரும், சட்டங்கள் விரியும், போர்கள் மல்கும், தொல்லைகள் ஓங்கும்.

ஓர் இனத்தால் மற்ற இனங்களுக்குத் தொல்லை. இதனால் ஒரு நாட்டால் மற்ற நாட்டிற்குக் குழப்பம் ஏற்படும்.

இடம் சுட்டிப் பொருள் விளக்குக :

39. "ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே"

*Ans.* :

இடம் : புறநானூறு பாடல்

விளக்கம் : மகனைப் பெற்று வளர்த்து விடுதல் என்னுடைய ( தாய் ) கடமையாகும்.

40. "அறத்தான் வருவதே இன்பம்"

*Ans.* :

இடம் : திருக்குறள்

விளக்கம் : அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.

41. "இதுதான் ஓசோனுக்கு எமன்"

*Ans.* :

இடம் : சுற்றுச்சூழல்

விளக்கம் : C.F.C. யின் ஒரு மா க்யூல். ஓசோனின் மா க்யூலை அழிக்கும். இது, நம் வீட்டில் பயன்படுத்தும் குளிர்சாதனப் பெட்டி முத யவற்றில் உள்ளது. இது ஓசோனின் எமன்.

42. "எம் தமிழ்ப்பாவையைச் சுமந்து செல்லுங்கள்"

*Ans.* :

இடம் : கண்ணகி கோயில் செய்த சேரன் செங்குட்டுவன்

விளக்கம் : தமிழ் மன்னர்களை இகழ்ந்த வடவர்களை நோக்கி, "கனகா, விசயா! தமிழ் பாவையைச் சுமந்து செல்லுங்கள். இதுவே உமக்கு ஏற்றது. வடவர் இனியாவது தமிழகம் பழித்தல் ஒழியட்டும்."

43. "திருவள்ளுவன் இறந்த காலத்தில் இருந்தவன்தான் ஆனால் இன்னமும் அவன் இறந்துவிடவில்லை"

*Ans.* :

இடம் : இலட்சியம்

விளக்கம் : காலம் இறந்துவிடுகிறது. ஆனால் மனிதனின் செயல்களால் வாழ்ந்து கொண்டிருக்கிறது. திருவள்ளுவன் இறந்த காலத்தில் இருந்தவன். ஆனால், அவன் இறந்துவிடவில்லை. இறந்த காலத்தில் கட்டப்பட்டதுதான் தாஜ்மகால். ஆனால் இறந்த காலம் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

**IV. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக : $3 \times 4 = 12$**

44. தீப்பெட்டி தொழிற்சாலைக்குச் சென்று வரும் குழந்தைகளைப் பற்றி எழுதுக.

*அல்லது*

செங்குட்டுவன் கண்ணகிக்குக் கட்டிய கோயிலைக் கண்டு வியந்ததை விவரி.

*Ans.* :

அதிகாலை - புறப்பட்டுப் போன தீப்பெட்டி ஆபீஸ் பஸ்கள், கரும்புத்துண்டை மென்று சாறை விழுங்கிவிட்டு சக்கையைத் துப்புவதுபோல குழந்தைகளை வெளியே தள்ளுகின்றன. சில குழந்தைகள் கையிலுள்ள கா த் தூக்குச் சட்டிகளை வீசிக் கொண்டே குதிக்கிறார்கள்.

சீக்கிரம் குளித்துவிட்டு, சாப்பிட்டுவிட்டு படுக்க வேண்டும். ஒவ்வொருவர் அசைவிலும் வேகம் தெரிகிறது.

விழுந்தது விழுந்தபடி அலங்கோலமாக அப்படி அப்படியே கிடக்கிறார்கள். மூச்சுப் பிரிதல் ஒன்றே அவர்களை வித்தியாசப்படுத்துகிறது.

அல்லது

கல்லால் ஆனதா! மரத்தால் ஆனதா? மண் கொண்டியற்றியதா! அன்றிப் பொன் கொண்டியற்றியதா! மரத்தின் நெளிவையும் வளைவையும் எப்படி கல் ல் ஏற்றினீர் ?

ஓ! கல் ல் வடித்தது என்று யாரும் கூறார். நிற்பது கண்ணகியே!

மருளும் வண்ணம் இயற்றிய உங்களுக்கு ஆயிரம் காணி மானியம் விட்டேன்.

45. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நம் முன்னோர்களிடம் இருந்தது என்பதைச் சான்றுடன் விளக்குக.

*அல்லது*

சேதுப்பிள்ளையவர்கள் "இவர்கள் கைவண்ணம் இங்குக் கண்டோம்" என்னும் தொடரை நினைவூட்டும் நிகழ்ச்சியினை விவரிக்க.

*Ans.* :

பிராண வாயுவை எடுத்துக் கொண்டு கார்பன்-டை-ஆக்ஸைடை வெளியிடுகிறோம். மரம் செடிகள் கார்பன்-டை-ஆக்ஸைடை எடுத்துக் கொண்டு பிராண வாயுவை வெளிவிடுகின்றன.

இது ஒழுங்காக நடப்பதில்லை. காடுகளை மனிதன் அழிக்க ஆரம்பித்தான். வாகனங்கள், தொழிற்சாலைகள் விடுகிற புகை வேறு. ஓசோன் படலத்தைக் கெடுக்கும் C.F.C. உள்ள பொருட்களைப் பயன்படுத்துகிறான்.

அல்லது

சேதுப்பிள்ளைக்கு விருப்பமான உணவில் ஒன்று தயிர்வடை. மாணவியர் தயார் செய்தனர். விருந்தில் கலந்துகொண்ட இந்தித் துறைத் தலைவர் தயிர் வடையைச் சுவைத்து உண்டார். சென்னையில் எந்த விடுதியில் தயாரிக்கப்பட்டதோ? என்றார். சேதுப்பிள்ளை மாணவியர் பக்கம் தம் கரத்தை நீட்டி "இவர்கள் கைவண்ணம் இங்கு கண்டோம்" என்ற கம்பன் கவித்தொடரை நினைவூட்ட அனைவரும் சிரித்தனர்.

46. இளையான்குடி மாறர் மனைவி சிவனடியார் வடிவில் வந்த சிவனுக்கு அமுது படைக்க மேற்கொண்ட செயல்களை விளக்குக..

*அல்லது*

பெண் விடுதலை குறித்து பாரதியார் கூறுவனவற்றை எழுதுக.

*Ans.* :

இளையான்குடி மாறர் கொண்டுவந்த முளை நெல் ல் சேற்றை நீக்கினார்.

அடுப்பெரிக்க கூரை வரிச்சுகளை வெட்டினார்.

நெல்லைப் பதமாக்கி வறுத்து, குற்றி அரிசியாக்கி உலையில் இட்டு அமுதாக்கினார்.

பருவமுறாத இலைக்கறிப் பயிர்களை பலவகையான கறிகளாக்கி சமைத்தார்.

அல்லது

பிடித்த பிசாசுகள் போயின. கல்வி பயிலக் கூடாது என்றவர் மாய்ந்தனர்.
வீட்டில் பெண்ணைப் பூட்டி வைப்போம் என்றவர் தலை கவிழ்ந்தனர்.
மாடு போன்று அடக்கிக் காட்ட வந்தவரை நீக்கி விட்டோம்.
கற்பு நிலை என்பது ஆண், பெண் இருவருக்கும் பொதுவில் வைப்போம்.
பட்டங்கள் ஆளவும், சட்டங்கள் செய்யவும் உலகில் பெண்கள் நடத்த வந்தோம்.
அறிவினில் ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்பதனைக் காண்க.

**V. அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4**

47. "சோதியாய்த் தோன்றும் ....." என வரும் இறைவாழ்த்துப் பாடல்.

*அல்லது*

"ஈன்று புறந்தருதல் ..." என வரும் புறநானூற்றுப் பாடல்.

*Ans.* :

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனை சொல்லுதற்கு அரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்த மாகடலே
தீதுஇலா நன்மைத் திருவருள் குன்றே
திருப் பெருந்துறை உறை சிவனே
யாது நீ போவது ஓர்வகை அருளாய்
வந்து நின் இணை அடிதந்தே. - மாணிக்கவாசகர்

அல்லது

ஈன்றுபுறந் தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே. - பொன்முடியார்

**VI. 48. பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருதல் : 4 × 1 = 4**

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்ற பாரதியாரின் கூற்றுப்படி பெண்கள் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர். விண்வெளிப் பயணம், விளையாட்டுப் போட்டி என உலக நாடுகளின் கவனத்தை நம் நாட்டுப் பெண்மணிகள் ஈர்த்து வருகின்றனர். பி.டி. உஷா, கர்ணம் மல்லேஷ்வரி, அசுவினி நாச்சப்பா, ஷைனி ஆப்ரகாம் முத ய விளையாட்டு வீராங்கனைகள், விளையாட்டுப் போட்டிகளில் சாதனை புரிந்து நம் நாட்டின் பெருமையினை உலகிற்கு உணர்த்தினர். இவர்களுடைய வரிசையில் தடகளப் போட்டியில் சாதனை படைத்தவர் அஞ்சு பாபி ஜார்ஜ். இவர் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றதன் மூலம் தடகளப் போட்டிகளில் பதக்கம் வென்ற முதல் வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார்.

வினாக்கள்:

i) பெண்களைப் பற்றி பாரதியின் கூற்று என்ன ?

ii) விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்த சில பெண் வீராங்கனையர் பெயர்களை எழுதுக.

iii) தடகளப் போட்டியில் சாதனை படைத்தவர் யார் ?

iv) அஞ்சு பாபி பெற்ற பெருமை யாது ?

*Ans.* :

i) பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்.

ii) பி.டி. உஷா, கர்ணம் மல்லேஷ்வரி, அசுவினி நாச்சப்பா, ஷைனி அப்ரகாம்.

iii) அஞ்சு பாபி ஜார்ஜ்

iv) தடகளப் போட்டியில் பதக்கம் வென்ற முதல் வீராங்கனை.

## பகுதி ஆ

**VII. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுதல் : 10 × 1 = 10**

49. வயலும் வயல் சார்ந்த இடமும் ......................................... .

(A) மருதம் (B) குறிஞ்சி

(C) பாலை (D) நெய்தல்.

*Ans.* :

(A) மருதம்

50. வாழ்க வாழ்க என்பது ......................................... .

(A) இரட்டைக்கிளவி (B) அடுக்குத் தொடர்

(C) அன்மொழித் தொடர் (D) வேற்றுமைத் தொடர்.

*Ans.* :

(B) அடுக்குத் தொடர்

51. இரண்டு சீர்களை உடையது ................................ .

(A) சிந்தடி (B) அளவடி

(C) குறளடி (D) நெடிலடி.

*Ans.* :

(C) குறளடி

52. சொல்லோ, தொடரோ இரு பொருள் படுமாறு பாடுவதும் பேசுவதும் ................................ .

(A) முரண் (B) இரட்டுற மொழிதல்

(C) பிறிதுமொழிதல் (D) எதுகை தொடர்.

*Ans.* :

(B) இரட்டுற மொழிதல்

53. அழகு அழகாய்ப் பூப்பூக்கும்
அம்மாடி என்று காய் காய்க்கும்.
- இதில் அமைந்துள்ள தொடை ............................ .

(A) முரண் (B) எதுகை
(C) மோனை (D) இயைபு.

*Ans.* :

(C) மோனை

54. குற்றமற்ற வெற்றியைக் கொண்டாடுதல் என்பது ...................................... .

(A) வெட்சி (B) நொச்சி
(C) வாகை (D) கரந்தை.

*Ans.* :

(C) வாகை

55. வகுப்பு சிரித்தது. இது ...................................... .

(A) காலவாகு பெயர் (B) தொழிலாகு பெயர்
(C) இடவாகு பெயர் (D) சினையாகு பெயர்.

*Ans.* :

(C) இடவாகு பெயர்

56. செய்யுளுக்கு உரிய சொல் ...................................... .

(A) கடிச்சொல் (B) உரிச்சொல்
(C) புகழ் (D) உவகை.

*Ans.* :

(B) உரிச்சொல்

57. அகவல் ஓசை உடையது ...................................... .

(A) ஆசிரியப்பா (B) வெண்பா
(C) வஞ்சிப்பா (D) க ப்பா.

*Ans.* :

(A) ஆசிரியப்பா

58. செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும் அழகுபடுத்துவது ...................................... .

(A) அணி (B) அடி
(C) பா (D) தொடை.

*Ans.* :

(A) அணி

**VIII. தொடர்புபடுத்தி எழுதுக:** **4 × 1 = 4**

59. ஒற்றெழுத்துகள் நீண்டு ஒ ப்பது : ஒற்றளபெடை

உயிர் எழுத்துகள் நீண்டு ஒ ப்பது : ............................................ .

*Ans.* :

உயிரளபெடை

60. பாமர மக்களின் பழமைமொழி : பழமொழி

விடுவிக்கப்பட வேண்டிய கதை : .............................. .

*Ans.* :

விடுகதை

61. கல் + குகை : கற்குகை

பல் + பொடி : ............................................ .

*Ans.* :

பற்பொடி

62. விலங்குகளுக்கு மருத்துவமனை கட்டியவன் : அசோகன்

கண்ணகிக்குக் கோயில் கட்டியவன் : ........................................ .

*Ans.* :

சேரன் செங்குட்டுவன்.

**பகுதி இ**

**IX.** 63. உனது பிறந்தநாள் விழாவிற்கு வருமாறு சென்னையில் இருக்கும் உன் நண்பனுக்கு / தோழிக்கு மடல் ஒன்று எழுதுக. 1 × 5 = 5

*அல்லது*

நீ வாழும் பகுதியில் தூய்மையான குடிநீரில் கழிவு நீர் கலப்பதை விளக்கி தகுந்த தலைப்புடன் 'தினகரன்' நாளிதழுக்கு செய்திக் குறிப்பு எழுதுக.

*Ans.* :

நண்பனுக்கு / தோழிக்குக் கடிதம்

நாள்

இடம்

அன்புள்ள ......

- கடிதப் பொருள்

இவண்

எழுதுவோர் பெயர்

பெறுவோர் முகவரி

*அல்லது*

**செய்திக்குறிப்பு** **1 × 5 = 5**

தலைப்பு: தூய்மையான குடிநீர் அவசியம்

இருப்பிடம்

- கழிவுநீர் கலத்தல்
- தூய்மை வேண்டியதன் அவசியம்
- புதிய குழாய்களை அமைக்க அரசின் கவனத்தை ஈர்த்தல்.

**X. 64.** பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்து கட்டுரை எழுதுக: **1 × 5 = 5**

அ. கைபேசியின் நன்மைகள்

ஆ. இயற்கைச் சீற்றம்

இ. பொங்கல் விழா.

*Ans.* :

- தலைப்பிற்கேற்ற முன்னுரை
- தலைப்பை ஒட்டிய பக்கத் தலைப்புகள்
- கட்டுரையின் நோக்கம்
- நிறைவுறும் வகையில் வ யுறுத்தல்
- முடிவுரை.